முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், நடிகவேள் எம்.ஆர்.ராதா அவர்களின் மனைவி திருமதி கீதா ராதா அவர்கள் இயற்கை எய்தியதையொட்டி, நேற்று முன்தினம் (22.09.2025) சென்னையிலுள்ள அவரது இல்லத்திற்கு நேரில் சென்று, உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, அவரது மகள் திருமதி ராதிகா சரத்குமார் உள்ளிட்ட குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மரு. நா. எழிலன் எம்.எல்.ஏ., வீட்டு வசதி வாரியத்தின் தலைவர் பூச்சி எஸ். முருகன், மாநகராட்சி நிலைக்குழு தலைவர் நே.சிற்றரசு, ராதாரவி, சரத்குமார், கராத்தே தியாகராஜன் ஆகியோர் உள்ளனர்.

குடிமங்கலம் ஒன்றியம் அம்மாபட்டி பகுதியில்

ரூ.7 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட உயர் மட்ட பாலம்!

அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன் - என்.கயல்விழி செல்வராஜ் திறந்து வைத்தனர்!

திருப்பூர், செப். 24-

திருப்பூர் மாவட்டம், குடிமங்கலம் ஒன்றிம், வேலாயுதகவுண்டன்புதூர் நெகமம் சாலையில் அம்மாபட்டி பகுதியில் ரூ.7 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட உயர் மட்ட பாலத்தை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், திருப்பூர் கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன், கழக மகளிர் அணி துணைச் செயலாளர், மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் திறந்து வைத்தனர்.

திருப்பூர் மாவட்டம், குடிமங்கலம் ஊராட்சி ஒன்றியம், அம்மாபட்டியில் அம்மாபட்டி, பெரிய பட்டி, ஆமந்தகடவு, கொண்டம்பட்டி, வேலாயுத கவுண்டன்புதூர் கிராமங்களை சார்ந்த பொதுமக்கள் பயன்பெறும் வகையில் நபார்டு திட்டத்தின் கீழ் ரூ.7.00 கோடி மதிப்பீட்டில் 6 கண்கள் 15.00 மீட்டரிலும், 9.95 மீட்டர் நிளத்திலும், 90.00 மீட்டர் அகலமும் கொண்டு கட்டப்பட்டுள்ள உயர் மட்ட பாலத்தை திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டத்தலைவர் இல.பத்மநாபன், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் க.ஈஸ்வரசாமி, குடிமங்கலம் மேற்கு ஒன்றியச் செயலாளர் அடிவள்ளி முரளி ஆகியோர் முன்னிலையில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், திருப்பூர் கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன், கழக மகளிர் அணி துணைச் செயலாளர், மனித வள மேலாண்மைத் துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் திறந்து வைத்தனர்.

இந்நிகழ்வில் உடுமலைப் பேட்டை வருவாய் கோட்டாட்சியர் குமார், நெடுஞ்சாலைத்துறை கண்காணிப்பு பொறியாளர் (நபார்டு மற்றும் கிராம சாலைகள்) சரவணன், கோட்டப்பொறியாளர் (கோயம்புத்தூர்) இந்திரன், உதவி கோட்டப்பொறியாளர் (பொள்ளாச்சி) பத்மா, குடிமங்கலம் கிழக்கு ஒன்றிய செயலாளர் சா.ராஜமாணிக்கம், குடிமங்கலம் வடக்கு ஒன்றிய செயலாளர் அனிக்கடவு ச.கிரி, தலைமை செயற்குழு உறுப்பினர் சி.சியாம் பிரசாத் உள்பட தலைமைக் கழக, மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, கிளைக் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

பொதுமக்களின் 30 ஆண்டு கால கோரிக்கையினை நிறைவேற்றிடும் வகையில்

கரூர் முதல் பெருந்துறை வரை புதிய வழித்தடத்தில் புதிய பேருந்து இயக்குக!

ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் கோரிக்கை!

ஈரோடு, செப். 24-

பொதுமக்களின் 30 ஆண்டு கால கோரிக்கையினை நிறைவேற்றிடும் வகையில் கரூர் பேருந்து நிலையம் முதல் பெருந்துறை பேருந்து நிலையம் வரை புதிய வழித்தடத்தில் புதிய பேருந்து இயக்க வழிவகை செய்ய வேண்டும் என்று ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர், கழக இளைஞர் அணி துணைச் செயலாளர் கே.இ.பிரகாஷ் கோரிக்கை விடுத்துள்ளார்.

அதன் விவரம் வருமாறு :

ஈரோடு நாடாளுமன்ற தொகுதிக் குட்பட்ட மொடக்குறிச்சி சட்ட மன்றத் தொகுதி வழியாக கரூர் பேருந்து நிலையம் முதல் பெருந்துறை பேருந்து நிலையம் வரை நாளொன்றுக்கு 4 முறை சென்று திரும்பும் வகையில் புதிய வழித்தடத்தில் புதிய பேருந்து இயக்கம் ஆரம்பித்து உதவிட வேண்டுகிறேன்.

கரூர் பேருந்து நிலையத்திலிருந்து புறப்பட்டு கொடுமுடி, தாமரைபாளையம், சிவகிரி, விளக்கேத்தி, அரச்சலூர், வெள்ளோடு, பெருந்துறை ஆர். எஸ் வழியாக பெருந்துறை பேருந்து நிலையம் வந்தடையும் வகையில் புதிய பேருந்து இயக்கம் அமைத்து பொதுமக்களின் 30 ஆண்டு கால கோரிக்கையினை நிறைவேற்றிட வழிவகை செய்ய வேண்டும் என்று ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர், கழக இளைஞர் அணி துணைச் செயலாளர் கே.இ.பிரகாஷ்

தமிழ்நாடு அரசு போக்குவரத்து துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் அவர்களிடம் கோரிக்கையினை நிறைவேற்றிதர வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளார்.

நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு அவர்கள் நேற்று (23.09.2025) திருச்சிராப்பள்ளி மத்திய பேருந்து நிலையம் அருகில் உள்ள கோ.ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தில் தீபாவளிக்கான முதல் விற்பனையை தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் வே.சரவணன், மேயர் மு.அன்பழகன், மாநகராட்சி ஆணையர் லி.மதுபாலன், மாவட்ட நகர் ஊரமைப்புக் குழு உறுப்பினர் வைரமணி, கோ.ஆப்டெக்ஸ் மண்டல மேலாளர் ஜெ.நாகராஜன், மேலாளர் வடிவமைப்பு மற்றும் உற்பத்தி கோபி, திருச்சி பொதிகை கோ.ஆப்டெக்ஸ் விற்றனை நிலைய மேலாளர் சங்கர், மண்டல தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

உதகை சட்டமன்றத் தொகுதி தூனேரி கிராம ஊராட்சிக்குட்பட்ட அணிக்கொரை சமுதாய கூடத்திலும் நடைபெற்ற 'உங்களுடன் ஸ்டாலின்' சிறப்பு முகாமினை அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன், நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் உதவி ஆட்சியர் (நிலம்) பழனிச்சாமி, சிறப்பு வட்டாட்சியர் குணவதி, உதவி வட்டார வளர்ச்சி அலுவலர் சோமசுந்தரம் மற்றும் உதகை வடக்கு ஒன்றிய (மேற்கு) செயலாளர் தொரை, ஒன்றிய துணைச் செயலாளர் பசுவன் உட்பட கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

திருவாரூர் மாவட்ட மாணவரணி ஆலோசனைக் கூட்டம்!

பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ., ச.பகலவன் பங்கேற்பு!

திருவாரூர், செப். 24 -

திருவாரூர் மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக மாணவரணி புதிய நிர்வாகிகள் அறிமுக ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. மாவட்டம் முழுவதும் மாணவர் மன்ற அமைப்புக்களை அமைத்து மாணவர் அணியை மேலும் பலப்படுத்துங்கள் என மாணவரணி புதிய நிர்வாகிகளுக்கு மாவட்ட செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ., ஆலோசனைகளை வழங்கி பேசினார்.

திருவாரூர் மாவட்டத்தில் ஒன்றிய, நகர, பேரூர் கழகங்களுக்கு தமிழ்நாடு முதல்வர், கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களால் நியமிக்கப்பட்டிருக்கும் மாணவரணி புதிய அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்களின் அறிமுக ஆலோசனைக் கூட்டம் மாவட்ட செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது.

மாணவரணி மாவட்ட துணை அமைப்பாளர் மதி.நெல்சன் மண்டேலா வரவேற்புரை வாசித்து நிகழ்சிகளை தொகுத்து வழங்கினார். நகர செயலாளர் வாரை எஸ்.பிரகாஷ், மாணவரணி மாவட்ட அமைப்பாளர் சா.பகலவன், துணை அமைப்பாளர்கள் மதி.முத்துக்குமார், ஜே.நூருல் அமீன், வை.யோகபாலன், சகுந்தலா தேவி உள்ளிட்டோர் முன்னிலை ஏற்றனர்.

நிகழ்வில் தலைமை ஏற்ற மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ., மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் மாவட்டமான திருவாரூரில் மாணவரணி அமைப்பாளர்களாக பொறுப்பேற்கும் அனைவருக்கும் வாழ்த்துக்களை கூறினார்.

மேலும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் தமது 14 வயதில் மாணவ நேசன் என்கிற பத்திரிக்கை மூலம் வலுவான மாணவ மன்றத்தை உருவாக்கித்தான் புகழின் உச்சிக்கு சென்றார். அதேபோல மாணவர்களாகிய நீங்கள் ஒவ்வொரு ஊரிலும் மாணவர் மன்றங்களை அமைக்கவேண்டும். அப்படி அமைத்து மாணவரணியை மேலும் மேம்படுத்தி முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களுக்கு பெருமை சேர்க்கவேண்டும் என்று கூறினார்.

ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளரும், வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி வழிகாட்டுதலின்படி ஈரோடு தெற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜெ. திருவாசகம் ஏற்பாட்டில் ஈரோடு கலை அறிவியல் கல்லூரியில் தொடர்ந்து மூன்றாவது வாரம் ஈரோடு தெற்கு மாவட்ட கழக இளைஞரணி மற்றும் சூர்யா அறக்கட்டளை இணைந்து நடத்தும் TNPSC குரூப் 2/2A பயிற்சி வகுப்பில் 850 மாணவர்களுக்கு பேராசிரியர் டி.கே.கிருபாகரன் பயிற்சி அளித்தார். டாக்டர் ஏ.கலியமூர்த்தி ஐ.பி.எஸ்., மாணவர்களுக்கு அறிவுரை வழங்கி, சிறப்புரையாற்றினார். நிகழ்வில் ஈரோடு கலை அறிவியல் கல்லூரி நிர்வாக இயக்குனர்கள் ஆர்.வெங்கடாசலம், எம்.வெங்கடாசலம், மாவட்ட துணை செயலாளர் ஆ.செந்தில்குமார், ப.க.பழனிச்சாமி, இரா.நித்தின், சீனிவாசன், சசிகுமார், லெமன் நவீன், மதன்குமார், விக்னேஸ்வர், அருண்குமார், சபரீஸ் , வேல்முருகன், ஹரி விக்னேஷ், பிரபு, ஹரி பிரசாந்த், சண்முகம், தினேஷ், வெங்கடேசன், கபில் குமார், வினோத் சிங், தினேஷ், மணிநாதன், கவியரசு, ஆஷிக், அருண், பிரபாகரன், சரவணமுத்து, சிவா (எ) மணிகண்டன், ஐ.டி விங் நிர்வாகிகள் ரகுபதி, ஜாகிர் உசேன், சந்தோஷ், அருண், ஆனந்த், சூர்யா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியாரின் 147வது பிறந்த நாளை முன்னிட்டு ஈரோடு மாநகராட்சி திருமண மண்டபம் அருகில் தந்தை பெரியாரின் திருவுருவப் படத்திற்கு கோட்டை பகுதி கழக செயலாளர் பொ.இராமச்சந்திரன் மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினார். நிகழ்வில் தொ.மு.ச. மாவட்ட கவுன்சில் தலைவர் தங்கமுத்து, செயலாளர் கோபால், துணைச் செயலாளர் ரவிச்சந்திரன், ஆட்டோ ஓட்டுனர் சங்க செயலாளர் திருநாவுக்கரசு, டாஸ்மாக் தாலூக்கா தலைவர் செல்லமுத்து, கதிர்வேல் வட்ட கழக செயலாளர் ஹரிஹரன், மினிடோர் ஓட்டுநர் சங்க தலைவர் செந்தில்குமார் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், தொ.மு.ச. நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

தி.மு.க. மாணவர் அணி

மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

தி.மு.க. மாணவர் அணிச் செயலாளர் இரா. ராஜீவ்காந்தி அறிவிப்பு!

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி - மாவட்டப் பொறுப்பாளர் ஒப்புதலோடு தி.மு.க. மாணவர் அணியின் திருப்பூர் வடக்கு மாவட்டம் - திருப்பூர் வடக்கு மாநகரம், திருநெல்வேலி மத்திய மாவட்டம் - திருநெல்வேலி மேற்கு ஆகிய மாநகரங்களின் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்

திருப்பூர் வடக்கு மாவட்டம்

திருப்பூர் வடக்கு மாநகரம்

அமைப்பாளர் - க. கிரித்தின் கவியரசு எஸ்.என்.வி.எஸ். 1வது கொங்கு நகர், மெயின் ரோடு, திருப்பூர் - 641607.

துணை அமைப்பாளர்கள் - 1) எஸ். சந்துரு 8/258, காமராஜர் வீதி, அங்கேரிபாளையம், திருப்பூர். 2) வீ. கௌதம் சிவகுமார் எஸ்1, சி-பிளாக், சமுக்த்தா அப்பார்ட்மெண்ட், மும்மூர்த்தி நகர், பி.என். ரோடு, திருப்பூர் - 641602. 3) எல். நிசாருதீன் 29/3, 19/3, திருநீலகண்டபுரம் வடக்கு 3வது வீதி, திருப்பூர் - 641602. 4) எ. சூரியபிரகாஷ் 2/5ஏ, ஜீவா வீதி, அனுப்பர்பாளையம், திருப்பூர். 5) ஆர். சுல்பிகர் அலி 2, பட்டாளம்மன் கோவில் வீதி, பள்ளக்காட்டுத் தோட்டம், வேலம்பாளையம், திருப்பூர். 6) ரா. கிளாடிஸ் அலெக்ஸ் 12/31, டீச்சர்ஸ் குடியிருப்பு, பிஸப் ஸ்கூல் பின்புறம், 4வது வீதி, குமார் நகர், திருப்பூர்.

திருநெல்வேலி மத்திய மாவட்டம்

திருநெல்வேலி மேற்கு மாநகரம்

அமைப்பாளர் - பி. வினோத்குமார் 1/பி, மாவடி குளத்தாங்கரை, தச்சநல்லூர், திருநெல்வேலி மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) எஸ். சரவணன் 18/16, பாலபாக்யா நகர், மதுரை ரோடு, திருநெல்வேலி மாவட்டம். 2) பி. ஜெயகுமார் 6, மேலக்கரை நியூ குடியிருப்பு, தச்சநல்லூர், திருநெல்வேலி மாவட்டம். 3) முகம்மது ஆஷிக் 87ஏ/1, எம்.ஜி.பி. சன்னதி தெரு, பேட்டை, திருநெல்வேலி மாவட்டம். 4) மு. அம்பேத் பிரபாகரன் 13ஏ, கிருஷ்ணபேரி முஸ்லீம் தெரு, திருநெல்வேலி டவுன், திருநெல்வேலி மாவட்டம். 5) எஸ். சித்ரா 22, எண்ணாயிரம் பிள்ளை கோவில் மேலத் தெரு, திருநெல்வேலி டவுன், திருநெல்வேலி மாவட்டம்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 22-09-2025.

இரா. ராஜீவ்காந்தி,
செயலாளர்
தி.மு.க. மாணவர் அணி

திருப்பூர் மத்திய மாவட்டம், மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, கழக மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணி ஆலோசனைக் கூட்டம் மாவட்டக் கழக அலுவலகமான முரசொலி மாறன் வளாகத்தில், மாவட்டச் செயலாளர், தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் தலைமையில் தெற்கு மாநகர செயலாளர், டி.கே.டி மு.நாகராசன் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழக மகளிர் தொண்டர் அணி துணை செயலாளர் மாலதி நாகராஜ், மலர் மரகதம், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் கலைச்செல்வி, மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் ஆனந்தி, மாவட்ட துணை செயலாளர் ஜி.கே நந்தினி, மாநகர துணை செயலாளர் மகாலட்சுமி, மாநகர அமைப்பாளர் விஜயா, மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

கோவை வடக்கு மாவட்டம், கவுண்டம்பாளையம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சோமயம்பாளையம் ஊராட்சியில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமை மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி முன்னிலையில் கோவை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் கணபதி ப.ராஜ்குமார் துவக்கி வைத்து நேரில் பார்வையிட்டு பயனாளிகளுக்கு சான்றிதழ்களை வழங்கினார். இதில் கோவை வடக்கு மாவட்ட துணைச் செயலாளர் அசோக் பாபு, ஒன்றிய கழகப் பொறுப்பாளர் தாமோதிரன், சி.எம். கே.குமார், சோமையம்பாளையம் ஆனந்த் உள்பட கழக நிர்வாகிகள், துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.